RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# சைவப் பேரியக்கக் கட்டமைப்பில் உணவின் வகிபாகம்

இரா. கோகுல் [அ, *]

[அ] தமிழ்த்துறை, , ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641020, தமிழ்நாடு, இந்தியா.

# Role of food in Vegetarianism

**R. Gokul** [a, *]

[a] Department of Tamil, Sri Ramakrishna Mission Vidyalaya College of Arts and Science (Autonomous), Coimbatore-641020, Tamil Nadu, India

* Corresponding Author: gokulr@gmail.com

Received: 03-04-2024
Revised: 13-06-2024
Accepted: 27-06-2024
Published: 30-07-2024

Check for updates

**ABSTRACT**

In Thiruthonda Purana composed by Sekizhar, the Nayanmars' deeds to Shiva are talked about. They have done charity to Shiva in various ways. From reciting Srirutram to donating skins for temple musical instruments, they are charitable in many ways. Sekizhar compiles all of them in one place. One of the charities they did was feeding Shivanati. They have done this widely. This article seeks to answer the questions of how feeding philanthropy participated in the efforts to construct vegetarianism as a miracle, and what were the consequences. This article proceeds with the hypothesis that the virtue of eating is emphasized in the Palandami literature, but it has greatly benefited the construction of Saivaism during the Sekijar period.

**Keywords:** Sekizhar – Thiruthonder Purana – Charity of feeding – Method of feeding – Feeding of servants is the reason of birth

## முன்னுரை

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய சிவபெருமானைத் தலையால் வணங்கி, வாயால் வாழ்த்தி, நெஞ்சால் நினைந்து, தங்களுக்குள் தேடிக் கண்டுகொண்டு இறுமாந்திருந்த நாயன்மார்களின் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணம் என்னும் காப்பியமாக சேக்கிழார் இயற்றி அளித்தார். அடியார்களின் தொண்டுநெறியை உலகற்கு வெளிப்படுத்திக் காட்டுவதன் வாயிலாக அவர் சைவப் பேரியக்கக் கட்டமைப்பில் முக்கியமான பங்காற்றியுள்ளார் எனலாம். கோயில்களில் தொண்டு செய்வோராக, தலயாத்திரை செய்வோராக, பரமனைப் பாடுபவராக, கற்கோயில் உளக்கோயில் அமைப்போராக, ஊழ்கத்தினராக, அடியார் வழிபாட்டாளர்களாக, சிவவேடத்தைப் பூசிப்போராக என்று பல்வேறு வகையில் நாயன்மார்கள் சிவத்தொண்டில் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகிறது. அவற்றுள் அவர்கள் உணவிட்ட திறமும், உணவுண்ட செயல், முறை பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. அவற்றைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது சைவப் பேரியக்கத்தின் அங்கத்தினர்களான நாயன்மார்களின் உணவுமுறை குறித்த ஒரு பொதுச்சித்திரம் காணக்கிடைக்கிறது. அது ஒரு முக்கியமான செய்தியைத் தாங்கி நிற்கிறது. அதனைக் கண்டடையும் முயற்சியே இக்கட்டுரை.

## உணவிட்ட அடியார்களும் உணவிட்ட முறைமையும்

திருத்தொண்டர் புராணத்தில் சிவனடியார்களுக்கு உணவிடுதலையே தங்கள் வழியாக, திருத்தொண்டாகக் கொண்ட பலர் காணப்படுகின்றனர். அவர்களின் பட்டியல் பின்வருமாறு.

1. இளையான்குடி மாறனார்
2. காரைக்காலம்மையார்
3. அப்பூதியடிகள்
4. சோமாசி மாறனார்
5. சிறுத்தொண்டர்
6. நரசிங்கமுனையரையர்
7. கலிக்கம்பர்
8. முனையடுவார்
9. இடங்கழியார்
10. கோட்புலியார்

என்போர்

இச்சிவனடியார்கள் உணவிட்ட முறைமை பல திறத்தது. அவை கவனிக்கத்தக்கன.

- சிவனடியார்கள் என்ன உணவு கேட்கின்றனரோ அதனை அளித்தோர்.
- தங்களால் என்ன உணவு அளிக்க இயலுமோ அதனை அளித்தோர்.
- சிவனடியார்கள் கேட்கும் உணவை எந்த வகையிலும் பெற்று அளித்தோர்.
- சிவனடியார்கள் எந்த நேரத்தில் வந்தாலும் அவர்களுக்கு உணவிட்டோர்.
- சிவனடியார்கள் உணவருந்திய பின்னரே உணவுண்ணும் வழமையுடையோர்.
- மரக்கறி உணவு மட்டுமல்லாது சிவனடியார்கள் ஊனுணவு கேட்டாலும் கொடுத்தோர்.

## அடியார்களுக்கு உணவிடுதலே முதன்மையறம்

காலத்தால் மூத்த நாயன்மார்களுள் ஒருவர் காரைக்காலம்மையார் ஆவார். தலங்கள்தோறும் சென்று சிவபெருமானைப் பாடி பக்தி இயக்கத்தையும் இலக்கியத்தையும் முன்னெடுத்தவராக முதலில் அறியப்படுபவர் அவரே. அவரது வரலாற்றில் அடியார்களுக்கு உணவிடும் தொண்டுநெறி முதன்மையிடம் பெறுகின்றது. அதுவே அவரது வாழ்வின் திருப்புமுனையாகவும் ஆகிறது. அவரிட்ட உணவு யாது, அதனை எங்ஙனம் இட்டார் என்பன போன்ற குறிப்புகளைத் திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் விரிவாக அளிக்கிறார்.

"கறிஅமுதங் குதவாதே திருஅமுது கைகூட

வெறிமலர்மேல் திருவனையார் விடையவன்தன் அடியாரே

பெறலரிய விருந்தானால் பேறிதன்மேல் இல்லையெனும்

அறிவினராய் அவரமுது செய்வதனுக் காதரிப்பார் (திருத்தொண்டர் புராணம், பா. 1740)

இல்லாளன் வைக்கவெனத் தம்பக்கல் முன்னிருந்த

நல்லநறு மாங்கனிகள் இரண்டினில்ஒன் றைக்கொண்டு

வல்விரைந்து வந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்

அல்லல்தீர்ப் பவர்அடியார் தமையமுது செய்வித்தார்" (திருத்தொண்டர் புராணம், பா. 1741)

என்பன சேக்கிழார் தம் சொற்கள்.

சிவனடியார்களுக்கு உணவிடும்பொழுது காரைக்காலம்மையார் அவர்களுக்கு பாதம் கழுவ நீர்அளித்து உணவிட்டார் என்பதனை "பாதம்விளக்க நீர் முன்னளித்துப் பரிகலம் வைத்து ஏதம்தீர் நல்விருந்தா இன்னடிசில் ஊட்டுவார்" (திருத்தொணடர் புராணம், பா. 1739) என்று காட்டுகிறார். அதுமட்டுமன்று, காரைக்காலம்மையாரின் கணவன் பரமதத்தன் நண்பகல் உணவிற்காக இல்லத்திற்கு வந்தான் என்று கூறும் சேக்கிழார், அவன் நீராடி தன்னைத் தூய்மை செய்துகொண்ட பின்பு உணவுண்டான் என்றும் கூறுகிறார்.

“உற்றபெரும் பகலின்கண் ஓங்கியபேர் இல்எய்திப்

பொற்புறமுன் நீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்

கற்புடைய மனையாருங் கடப்பாட்டில் ஊட்டுவார்” (திருத்தொண்டர் புராணம், பா. 1743)

என்பது அப்பாடல். இவை உணவிடும் முறைமையின் முக்கிய குறிப்புகள்.

சங்க காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் அதாவது பக்தி இலக்கிய காலத்திற்கு முன்தோன்றிய இலக்கியங்களிலும் பசித்தோர்க்கு உணவிடும் அறம் வலியுறுத்தப்பட்டுள்ளது. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்பதைப் புறநானூறும் (பாடல் 18), மணிமேகலையும் (மணிமேகலை,11: 96) முன்னிறுத்துவது யாவரும் அறிந்ததே. அது சிவத்தொண்டு என்று பக்தி இயக்கம் கட்டமைக்கப்படும்பொழுது மாற்றம்பெறுவதைக் காணலாம். சைவத்தில் இதற்கு முதற்புள்ளியாக காரைக்காலம்மையின் வரலாறு நிற்கிறது.

சேக்கிழார்,

“மண்ணி னில்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்

அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்” (திருத்தொண்டர் புராணம், பா. 2990)

என்று திருஞானசம்பந்தர் புராணத்தில் குறிப்பிடுகிறார். அடியார்களுக்கு உணவிடுதலே மண்ணில் பிறப்பெடுத்தமைக்கான பயன் என்கிறார். இப்பாடலை உற்றுநோக்கினால் ஒரு செய்தி புலப்படும். ‘சிவனடியார்கள் யாரும் பசிப்பிணியால் வருந்தக் கூடாது’ என்னும் நோக்கம் இக்கட்டமைப்பில் உள்ளதை உய்த்துணராலாம். சங்க காலத்திலிருந்து தொடர்ந்துவரும் ஈகை, விருந்தோம்பல், சமண பௌத்தர்களின் உணவிடும் அறம் போன்றவற்றின் தொடர்ச்சியாக சேக்கிழாரின் சொற்கள் அமைந்து சைவ அறம் பேசுகிறது.

## தடையில்லா உணவு

திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் சிவனடியார்களுக்கு உணவிடும் முறையில் ஒரு முக்கிய இயல்பை ஆங்காங்கே காட்சிப்படுத்துகிறார். குறிப்பாக அப்பூதியடிகள், சிறுத்தொண்டர் போன்றோரின் வரலாற்றில் அது நன்கு வெளிப்படுகிறது. அது என்னவென்றால், சிவனடியார்கள் உணவுண்பதில் எவ்விதத் தடையும் நேரிடக் கூடாது நேர்ந்தால் அது சிவத்தொண்டிற்கு இழுக்கு என்பதாகும். சிவனடியார்கள் உணவுண்பதில் தடை ஏற்பட்டால் தாங்கள் மேற்கொண்டிருக்கும் சிவத்தொண்டிலிருந்து வழுவி விட்டதாகப் பொருள் என்று அவ்வடியார்கள் கருதியுள்ளனர். அதற்காக உயிர் துறக்கவும் சித்தமாக இருந்துள்ளனர். (நாயன்மார்கள் யாவரும் இத்தன்மையரேயாயினும் உணவு என்ற பொருண்மை கருதி இவண் வரையறுக்கப்பட்டுள்ளது.)

திருநாவுக்கரசர் உணவுண்பதில் தடை நேரிடக்கூடாது என்று அப்பூதியடிகளும், பைரவ அடியாருக்கு அவர் கோரிய ‘மனிதப்பசு’ உணவை அளிக்கிறேன் என்று வாக்களித்து அழைத்துவந்த சிறுத்தொண்டரின் பதட்டமும் திருத்தொண்டர் புராணத்தில் நன்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். சிவனடியார்களுக்கு உணவிடுவதில் ஏற்படும் தடை இழிவானது என்ற கோட்பாடு நாயன்மார் வரலாற்றின்வழி வலியுறுத்தப்படுகிறது. ஏன்? சிவனடியார்கள் எங்கு சென்றாலும் அவர்களுக்கு உணவு கிடைக்க வேண்டும், அவர்கள் பசித்திருக்கக் கூடாது, சிவத்தைப் பரப்புபவர்கள் பசியால் வாடினால் அப்பரப்புரை தடைபடும், சைவம் மக்களிடம் சென்று சேர்வதில் தொய்வு நேரிடும் என்பதனால் என்று ஊகிக்கமுடிகிறது. சைவப் பேரியக்கம் தொய்வின்றி வளர வேண்டுமானால் அதன் பரப்புநர்களுக்கு எந்தக் குறையும் நேரிடாது பார்த்துக்கொள்ள வேண்டும். இதனால் நாயன்மார்கள் பலர் உணவிடும் தொண்டினைத் தீவிரமாகப் பின்பற்றியுள்ளதன் பின்புலம் விளக்கம் பெறுகின்றது. உணவு மட்டுமன்றி சிவனடியார்களுக்கு உடை வழங்குவதும் தொண்டாகக் கருதப்பட்டுள்ளது. (சான்று: அமர்நீதி நாயனார், நேச நாயனார்).

## அல்லவையும் அன்பினால் அறமாகும்

சிவனடியார்களுக்கு உணவிடுவதில் தடைநேரிடின் தங்கள் உயிரை விடுவதற்கும் தயாராக இருக்கும் நாயன்மார்களைக் காட்சிப்படுத்தும் சேக்கிழார், அவர்களுக்கென வைத்திருக்கும் உணவுப்பொருட்களை யாரேனும் எடுத்துக்கொண்டால் அவர்கள் உறவினர்களேயாயினும் - தான் பெற்றெடுத்த பிள்ளை, மனைவியேயாயினும் - அவர்களைக் கொல்லத் துணிந்தவர்களையும் காட்டுகிறார். கோட்புலி நாயனார் அத்தகையவர். நெற்களஞ்சியத்தைக் களவாடியும் உணவிட்டவர் இடங்கழியார். கொலை, தற்கொலை, களவு யாவும் சிவனடியார் தொண்டு என்னும் நிலையில் அறமாகிப் போன போக்கைக் காணமுடிகிறது. கொலையோ, களவோ இவண் நியாயப்படுத்தப்படுவதாகப் பொருளில்லை. சிவனடியார்கள் பசித்திருக்கக் கூடாது, அவர்கள் உணவுண்பதில் தடையேற்படக் கூடாது என்ற கொள்கையன்பின் உச்சநிலைகளைச் சேக்கிழார் சான்றாகக் காட்டுகிறார் என்று கொள்ளல் பொருத்தம். பக்தி இயக்கத்தை குறிப்பாக சைவப் பேரியக்கத்தைக் கட்டமைக்க முயன்ற பல்லவர்கால, சோழர்கால மக்களின் மனநிலைகளை, செயல்பாடுகளை சேக்கிழாரின் சொற்கள் பதிவுசெய்துள்ளன எனலாம்.

## அருத்தி அருந்து

சிவனடியார்களுக்குத் தடையின்றி உணவு கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதை அறமாக்கிய சைவ இயக்கம் அதை நடைமுறைப்படுத்த சில வழிமுறைகளையும் கைக்கொண்டிருந்ததை திருத்தொண்டர் புராணத்தின் மூலமாக உய்த்துணரலாம். அருத்தி அருந்துதல் என்பதே அவ்வழிமுறை. நாள்தோறும் சிவனடியார்கள் உணவுண்ட பின்னரே தாங்கள் உணவுகொள்ளுதலை நாயன்மார்கள் சிலர் வழக்கத்தில் கொண்டிருந்தனர். பைரவ அடியார் ஒருவர் திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் இல்லத்திற்கு வந்து “தொண்டானார்க் கெந்நாளும் சோறளிக்குந் திருத்தொண்டர் வண்டார்பூந் தாரார்இம் மனைக்குள்ளா ரோ” (திருத்தொண்டர் புராணம், பா. 3700) என்று கேட்க அதற்கு அவ்வில்லத்தின் தாதி சந்தனத் தையல் சொன்ன பதில் கவனிக்கத்தக்கது.

“அந்தமில்சீ ரடியாரைத் தேடியவர் புறத்தணைந்தார்” (திருத்தொண்டர் புராணம், பா. 3700)

என்பது அவர்தம் பதில்.

இதனால் நாள்தோறும் சிவனடியார்களுக்கு உணவிட்ட பின்னர் தாம் உணவருந்தும் வழக்கத்தை சிறுத்தொண்டர் பின்பற்றி வந்துள்ளதை அறியமுடிகிறது. இவ்வழக்கம் சிவனடியார்கள் யாரும் உணவின்றி வாடும் நிலையை இல்லாமலாக்கும் என்பதை உய்த்துணரலாம்.

சைவத்தைத் மெய்யியற் பின்புலமும் நடைமுறை வழக்கும் கொண்டு சித்தாந்த இயக்கமாகக் கட்டமைக்க முயன்ற திருமூலர்,

“யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி” (பத்தாம் திருமுறை, 1:19:2)

என்று பாடுகிறார்.

உணவின்றி வாடிநிற்கும் காலத்தினும் சிவனடியார்களுக்கு உணவிடு என்று கூறாது திருமூலர், எப்பொழுதெல்லாம் உண்பதற்கு உனக்கு உணவு கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் மற்றவர்களுக்கு ஒரு கைப்பிடி உணவு கொடுத்த பின்பு உண்க என்கிறார். இதனால் சிவபக்தி நிறைந்த ஒருவர் ஒரு கவளம் உண்டாலும் அதில் சிவனடியார்க்கும் பங்குண்டு என்று நெறிமுறை வரையறுக்கப்படுவதைக் காணலாம். சைவப் பேரியக்கத்தை சீர்குலையாது எடுத்துச் செல்லும் முக்கியக் கருவியாக இந்நெறிமுறை செயலாற்றியுள்ளதை திருத்தொண்டர் புராணத்தில் வரும் சில நாயன்மார்களின் வரலாற்றில் வெளிப்படையாகக் காணமுடிகிறது.

## மரக்கறியும் ஊனும்

மரக்கறியுணவு, ஊனுணவு என்பன பண்டைக்காலந்தொட்டு தமிழ்நிலத்தில் வழக்கிலிருக்கும் உணவு வகைகளேயாகும். ஆன்மீகம் என்று வரும்பொழுது மரக்கறியுணவு பரவலாக வலியுறுத்தப்படுவதை இன்றும் காணலாம். பெரியபுராணத்தில் இவ்விருவகை உணவுமுறைகளும் காணப்படுகின்றன. காரைக்கலம்மையார், அப்பூதியடிகள், இளையான்குடி மாறனார், முனையடுவார், கோட்புலியார் போன்ற அடியார்களின் வரலாறுகளைப் பாரக்கும்பொழுது மரக்கறி உணவே முதன்மை உணவாக விளங்கியுள்ளது பெறப்படுகிறது. ஆயினும் சிறுத்தொண்டரின் வரலாற்றில் ஊனுணவும் நரவுணவும் அன்றைய காலத்தில் நிலவிய சைவத்தின் சில பிரிவினரிடையே வழக்கத்திலிருந்துள்ளதைக் காணமுடிகிறது. ஆனால் அங்ஙனம் அவர் ஊனுணவு படைத்த நிலையும் அன்பு மேலீட்டினால் நடந்ததுதான் என்பது சேக்கிழார் தரும் குறிப்பு

சிறுத்தொண்டரிடம் பைரவ அடியார் தனக்கு 'பசுமாமிசம்' வேண்டும் என்று கேட்கிறார். அதற்கு சிறுத்தொண்டர்,

"சால நன்று முந்நிரையும் உடையேன் தாழ்விங் கெனக்கில்லை

ஆலம் உண்டா ரன்பர்உமக் கமுதாம் பசுத்தான் இன்னதென

ஏல வருளிச் செயப்பெற்றால் யான்போய் அமுது கடிதமைத்துக்

காலந் தப்பா மேவருவேன் என்று மொழிந்து கைதொழுதார்"(திருத்தொண்டர் புராணம், பா. 3713)

என்று விடையளிக்கிறார்.

ஊனுணவு வேண்டும் என்று கேட்கப்பட்ட இடத்தில் எத்தகைய ஊன் என்று கேட்கும்விதத்தில் சிறுத்தொண்டரின் பதில் அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது. முந்நிரை என்பது பசுத்திரள், எருமைத்திரள், ஆட்டுத்திரள் என்பன. இதுகுறித்து மா. பாலசுப்பிரமணிய முதலியார் பின்வரும் விளக்கக் குறிப்பினை அளிக்கிறார். "சிறுத்தொண்டர் சிவனடியாருக்கு அன்னதானஞ் செய்வதை நியதியாகக் கொண்டவர். அவர்பால் இதுகாறும் போந்த அடியார் எவரும் ஊனுணவு கேட்டார் என்று கூறுதற்குச் சான்றில்லை. இப்பொழுது போந்த அடியார் ஊன் - அதுவும் பசு ஊன் - கேட்கிறார். மறுப்பின் சிறுத்தொண்டரது அன்னதான நியதிக்கு இழுக்கு நேர்ந்துவிடும். சிறுத்தொண்டர் அன்பு மறுக்குந் தகையதன்று. அவர் சிவனடியாரிடம் தலையன்பு வாய்ந்தவர். தம் உடல் பொருள் ஆவி எல்லாம் சிவனடியார் உடைமை என்று கொண்ட பேரன்பால் விழுங்கப்பட்டவர். அவர் நெஞ்சம் சிவனடியார் விரும்புவதைச் செய்வதில் ஈடுபடுவதேயன்றி மறுப்பிலோ ஆராய்ச்சியிலோ ஈடுபடாதது. ஆகவே சிவனடியார் விரும்பியதைச் செய்யவே அவர்தம் அன்பு முனைந்து வீறிட்டு நிற்கிறது. அவர் 'பசு மட்டுமன்று, முந்நிரையும் உண்டு' என்கிறார்." (அ.ச. ஞானசம்பந்தன் (பதி), திருத்தொண்டர் புராணம், ப. 903) இவ்விடத்தில் அன்பே, அடியார் விருப்பத்தை நிறைவேற்றுதலே முதன்மையாகிறது என்பதைக் காணலாம். இது சைவப் பேரியக்கக் கட்டமைப்பின் ஆணிவேர்.

உணவு பசிநீக்கும் மருந்தாக மட்டுமல்லாது அது சமூகத்தைக் கட்டமைக்கும் ஒரு முக்கியக் கருவியாகவும் செயலாற்றியுள்ளதை, சைவப் பேரியக்கம் கட்டமைக்கப்படும்பொழுது சிவனடியார்களுக்கு உணவிடுதல் மிக முக்கியமான தொண்டாக வரையறுக்கப்பட்டுள்ளதை, அதற்குப் பின்புலமாக அமைந்திருந்த காரணங்களைத் திருத்தொணடர் புராணத்தின் வழியாக இக்கட்டுரை எடுத்துரைக்க முயன்றுள்ளது.

## References

அ.ச. ஞானசம்பந்தன் (பதி), திருத்தொண்டர் புராணம், சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை, 1993.

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உரை), புறநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2014

ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உரை), மணிமேகலை மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2015

பத்தாம் திருமுறை, திருமூலர் திருமந்திரம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, திருவாவடுதுறை, ஐந்தாம் பதிப்பு, 2006.

மா. சிவகுருநாதப் பிள்ளை, நாயன்மார்கள் வரலாற்றில் பல்வகைச் செய்திகள், திருவரசு புத்தக நிலையம், சென்னை, செப்டம்பர், 2000.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License